<u>**வாக்குமூலம்**</u>

<u>**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**</u>

<u>**வழக்கு எண் : SC.No. 178/2024**</u>

<u>**வழக்கு சாட்சி PW-2**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமலை | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சுப்பையா | தொழில் | : | பீடி சுற்றுதல் |
| கிராமம் | : | பூலான்குடியிருப்பு | வயது | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 09th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் பூலான்குடியிருப்பில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுற்றும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 7 வருடத்திற்கு முன்பு 3 வது மாதம், 9ம் தேதி வீட்டில் நான் மட்டும் தூங்கிக்கொண்டு இருந்தேன். எனது மகன் கேரளாவில் வேலை செய்து வருகிறார். சம்பவசமயத்தில் எனது மருமகள் பேறுகாலத்திற்காக அவரது அம்மா வீட்டிற்கு சென்று விட்டார். நான் தூங்கிக்கொண்டிருக்கும் போது, எதிரி எனது வீட்டின் ஓட்டை பிரித்து இறங்கி வந்தார். அப்போது, சத்தமாக கேட்டதால் நான் எழுந்து வந்து யாரென்று பார்த்தேன்.

எதிரி பேட்டரி லைட்டை வைத்து வீட்டிலிருந்த தேங்காய் திருவியை எடுத்து கொண்டு எனது மண்டையில் அடித்தார். நான் யாரென்று அவரது காலை பிடிக்க போனேன். அப்போது எதிரி எனது கழுத்தில் குத்தி விட்டு போய் விட்டார். எதிரி பீரோவை திறந்த சத்தம் கேட்டது. நான் கீழே விழுந்து விட்டேன். அதன் பின்னர், 02.30

மணியளவில் எனது சின்ன மாமனார் பரமசிவன் வீட்டின் கதவை நான் தட்டினேன். நான், ஒரு நபர் அடித்து போட்ட விபரத்தை சொன்னேன். என்னை செங்கோட்டை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்தார்கள். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையில் ஒரு மாதம் சிகிச்சை பெற்றேன். என்னை மருத்துவமனையில் வைத்து மாமாவும், எனது மருமகளும் வந்து பார்த்தார்கள். அவர்களிடம் நான் எதிரியின் பெயர், விபரத்தை கூறினேன்.

நான் எனது வீட்டின் பீரோவில் ரூ.1,50,000/-ஐ வைத்திருந்தேன். எதிரி அதனை எடுத்துக்கொண்டு சென்றார். அதன் பின்னர் ரொம்ப நாட்கள் கழித்து செங்கோட்டை நீதிமன்றத்தில் இருந்து ரூ.1,28,000/- பணத்தை பெற்றுக்கொண்டேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J
CHRISTAL
BABITHA

Digitally signed
by J CHRISTAL
BABITHA
Date: 2025.10.10
13:08:16 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 178/2024**
**வழக்கு சாட்சி PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இசக்கிமுத்து | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | இசக்கி | தொழில் | : | ஜவுளிக்கடையில் வேலை |
| கிராமம் | : | பூலான்குடியிருப்பு | வயது | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 09th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் பூலான்குடியிருப்பில் குடியிருந்து வருகிறேன். நான் எர்ணாகுளத்தில் ஜவுளிக்கடையில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பரமசிவன் எனது தாத்தா. அ.சா.2 திருமலை எனது அம்மா. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது நண்பர் ஆவார். அவரை என்னுடைய அம்மாவிற்கும் தெரியும். அவர் பூலான்குடியிருப்பில் எனது வீட்டிற்கு அருகில் குடியிருந்து வருகிறார். 09.03.2018 ம் தேதி, அதிகாலை 03.00 மணியளவில் எனது தாத்தா பரமசிவன் எனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார். எதிரி சுப்பிரமணியன் எனது வீட்டின் ஓட்டை பிரித்து எங்களது வீட்டிற்குள் இறங்கி எனது அம்மாவை கழுத்தை பிடித்து நெறித்ததில் மயக்கமாகி விட்டார்.

அதன் பின்னர் தேங்காய் திருகியை எடுத்து, எனது வீட்டின் பீரோவில் இருந்த ரூ.1,50,000/-ஐ எடுத்துக்கொண்டு பின் வாசல் வழியாக போகும்போது எனது அம்மா மயக்கம் தெளிந்து எதிரியின் காலை பிடித்து

இழுத்தபோது, எதிரி எனது அம்மாவின் தலையிலும், கழுத்திலும் தேங்காய் திருகியால் குத்தி விட்டு பின்வாசல் வழியாக தப்பி ஓடி விட்டதாக தகவல் சொன்னார்கள். அதன் பின்னர், நான் எனது மனைவிக்கு தகவல் சொன்னேன். எனது அம்மாவை எனது மனைவியும், எனது தாத்தாவும் செங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்று அங்கு முதலுதவி சிகிச்சை அளித்து விட்டு, திருநெல்வேலி ைஹகிரவுண்ட் மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக கொண்டு சென்றார்கள். அங்கு எனது அம்மா ஒரு வாரம் சிகிச்சையில் இருந்தார். எதிரி எனக்கு நல்ல நண்பர் என்பதினால் எனது திருமணத்தின் போது நாங்கள் பணத்தை பீரோவில் வைத்து எடுப்பதை பார்த்துள்ளார்.

அதன் பின்னர், தென்காசியிலுள்ள தனியார் மருத்துவமனையில் எனது அம்மாவை ரூபாய் மூன்று இலட்சம் செலவழித்து எனது அம்மாவிற்கு சிகிச்சை அளித்தோம். நான் காலையில் வீட்டிற்கு வந்து பார்த்தபோது, வீட்டிற்குள் சுவர் முழுவதும் இரத்தமாக இருந்தது. எனது அம்மா படுத்திருந்த பாய், தலையணை ஆகியவற்றிலும் இரத்தமாக இருந்தது. அதன் பின்னர், நான் திருநெல்வேலி அரசு மருத்துவமனை சென்று நான் பார்த்தேன். சம்பவத்திற்கு பிறகும் எனது அம்மா உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளார். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J
CHRISTAL
BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.10 13:08:23 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 178/2024</u>**
**<u>வழக்கு சாட்சி PW-4</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அனிதா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கருப்பசாமி | தொழில் | : | குடும்ப பொறுப்பு |
| கிராமம் | : | பூலான்குடியிருப்பு | வயது | : | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 09th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் பூலான்குடியிருப்பில் குடியிருந்து வருகிறேன். நான் குடும்ப பொறுப்புகளை கவனித்து வருகிறேன். அ.சா.1 பரமசிவன் எனது தாத்தா. அ.சா.2 திருமலை எனது மாமியார். அ.சா.3 இசக்கிமுத்து என்னுடைய கணவர். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் என்னுடைய ஊர்க்காரர். அவரை என்னுடைய மாமியாவிற்கும் தெரியும்.

09.03.2019 அன்று சுமார் 7 வருடங்களுக்கு முன்பு, நான் பூலான்குடியிருப்பில் உள்ள என்னுடைய தாயார் வீட்டில் பேறுகாலத்திற்காக போய் இருந்த சமயத்தில் அதிகாலை 03.00 மணியளவில் எனது தாத்தா பரமசிவன் என்பவரும், என்னுடைய கணவரும் எனக்கு போன் மூலம் என்னுடைய மாமியாரின் வீட்டிலுள்ள ஓட்டை உடைத்து, வீட்டிற்குள் வந்து அவரை தாக்கி ரூ.1,50,000/- பணத்தை எடுத்து சென்றதாக என்னிடம் கூறினார்கள்.

நான் உடனே என்னுடைய மாமியார் வீட்டிற்கு சென்றேன். அங்கு வீட்டிற்குள் இரத்தமாக கிடந்தது. பின்னர் தாத்தா பரமசிவன் வீட்டிற்கு சென்றேன். அங்கு எனது மாமியார் தலையில் இரத்தக்காயத்துடன் மயக்கமாக இருந்தார். பின்னர், ஆம்புலன்சில் செங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு நானும், எனது தாத்தாவும் மாமியாரை அழைத்து வந்தோம். செங்கோட்டையில் முதலுதவி சிகிச்சை மட்டும் அளித்து விட்டு பாளையங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

என்னுடைய தாத்தா பரமசிவன் புளியரை காவல்நிலையத்தில் புகார் கொடுப்பதற்காக சென்று விட்டார். நான் என்னுடைய மாமியாரை பாளையங்கோட்டை அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு சென்றேன். அங்கு ஒரு வாரம் என்னுடைய மாமியார் சிகிச்சை எடுத்துக்கொண்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.10 13:08:29 +0530